No. of Printed Pages : 7

பதிவு எண் | M | A | R | 2 | 0 | 1 | 8 |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

**(செய்யுள், உரைநடை)**

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

1. சேக்கிழார் பெருமான் அருளியது ________ .

(அ) பெரியபுராணம்

(ஆ) தலபுராணம்

(இ) சிவபுராணம்

[ திருப்புக

2. தாண்டகம் பாடுவதில் வல்லவர் ________ .
   (அ) திருஞானசம்பந்தர்
   (ஆ) திருநாவுக்கரசர்
   (இ) மாணிக்கவாசகர்

3. நும்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நந்திக்கலம்பக பாடலில் அமைந்துள்ள திணை ________ .
   (அ) பாடாண் திணை
   (ஆ) கரந்தைத் திணை
   (இ) வஞ்சித் திணை

4. அம்பேத்கரை ''ஆராய்ச்சியின் சிகரம்'' எனப் புகழ்ந்துரைத்தவர் ________ .
   (அ) இராசேந்திரபிரசாத் (ஆ) பெரியார் (இ) நேரு

5. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் ________ .
   (அ) மு. வரதராசனார் (ஆ) திரு.வி.க. (இ) பேரறிஞர் அண்ணா

6. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் :
   (அ) திருக்குறள் (ஆ) தேவாரம் (இ) திருவாசகம்

## பகுதி - 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6x1=6**

7. ________ நாள், திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

8. கம்பராமாயணத்தில் – நும் பாடப்பகுதியாக அமைந்துள்ள படலம் ________ .

9. எண்கு என்பதன் பொருள் ________ .

10. ''தமிழ் மிகவும் பண்பட்ட மொழி'' எனக் கூறிய மொழியியல் அறிஞர் ________.

11. காந்தியடிகள் ________ என்னும் நாடக நூலைப் படித்தார்.

12. ''உடம்பாா் அழியின் உயிரார் அழிவர்'' என்பார் ________ .

பகுதி - 3

III. **பொருத்துக.** **4x1=4**

| | | | |
|---|---|---|---|
| 13. | கவிகை | – | பவளம் |
| 14. | அரியாசனம் | – | அழிக்காமை |
| 15. | துகிர் | – | குடை |
| 16. | சாய்க்காமை | – | சிங்காதனம் |

பகுதி - 4

IV. **விடைக்கேற்ற வினா அமைக்கவும்.** **4x1=4**

17. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி நடத்துவதே சமத்துவமாகும்.

18. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.

19. வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்கர்.

20. பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்தமருத்துவம்.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x2=10**

21. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?

22. என்றும் இடும்பை தருவது எது ?

[ திருப்புக

23. கம்பனின் பெருமையைக் கூறும் தொடர்கள் இரண்டு எழுதுக.

24. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார் ?

25. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

26. சங்க வெண் குழையோர் யார் ? அவர் எத்தன்மையர் ?

27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **5x2=10**

28. திராவிட மொழிகள் எவை ? அவற்றிற்குத் தாய்மொழியாகத் திகழ்வது எது ?

29. விளக்கப்படம் பற்றி நீவிர் அறிவன யாவை ? எடுத்துக்காட்டு தருக.

30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை ?

31. 'வலவன் ஏவா வானூர்தி' – என்னும் தொடர் விளக்கும் பொருள் யாது ?

32. இளைஞர்களுக்கே உரிய கடமை எது எனக் காந்தியடிகள் கூறுகிறார் ?

33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. நும் பாடப்பகுதியில் உள்ள பணிவாய்ப்புக்குரிய கல்வித் தகுதிகளை எழுதுக.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : **24**)

### பகுதி - 1

**VII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x4=12**

**35.** தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை ?

**36.** குகன் படகைச் செலுத்திய விதத்தை விளக்குக.

**37.** சான்றோர் நட்புக்கு உவமையாகப் புறநானூறு கூறுவனவற்றை எழுதுக.

**38.** புலி முழங்கிய ஓசையைக் கேட்ட வனவிலங்குகளின் நிலையை சீறாப்புராண ஆசிரியர் எவ்வாறு குறிப்பிடுகிறார் ?

**39.** ''செடியின் வெற்றி பூவில் உள்ளது'' என இளந்திரையன் கூறுவனவற்றை எழுதுக.

### பகுதி - 2

**VIII.** கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x4=12**

**40.** தமிழரிடம் இன்று பரவியுள்ள பெருநோய் எது ? அதுகுறித்து விளக்குக.

**41.** அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார் ? அம்பேத்கரின் பெற்றோர் யாவர் ?

**42.** பேச்சுக்கலையில் தொடுத்தல் பற்றி எழுதுக.

**43.** உழவுத் தொழில் குறித்து எழுதுக.

**44.** 'எளிமை ஓர் அறம்' எனக் கருதிய காந்தியடிகள் அதைக் கடைபிடித்த முறையை விளக்குக.

[ திருப்புக

## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

**IX.** கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும். **5x1=5**

**45.** ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

(i) இலக்கணக் குறிப்புத் தருக. – ஒழுகுதல்

(ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

(iii) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?

(iv) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(v) பொருள் தருக – கிளை

**46.** கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

தமிழ்ச் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர்; மேலும், எளிய குடிமகனையும், குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. **5x1=5**

**வினாக்கள் :**

(i) தமிழ்ச் சான்றோர் மொழியை எவ்வாறு பிரித்தனர் ?

(ii) குடிமக்கள் காப்பியம் எது ?

(iii) தமிழ்ச் சான்றோர் யாரைக் காப்பியத் தலைவர்களாக்கினர் ?

(iv) சிலப்பதிகாரம் உலகாள்வோர்க்கு உணர்த்தும் அறநெறி யாது ?

(v) சங்ககாலத் தமிழர்களின் கலை இலக்கியத் தனித் தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்பவை எவை ?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : **26**)

### பகுதி - 1

**X.** கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும். **2x8=16**

**47.** (அ) காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

**அல்லது**

(ஆ) புலி வசனித்த படலத்தின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**48.** (அ) அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார் ?

**அல்லது**

(ஆ) கலை அறிவியல்கல்வி, சிறு தொழில்கல்வி குறித்து விவரிக்கவும்.

### பகுதி - 2

பின்வரும் மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. **2+2+6=10**

**49.** செய்யுள் வடிவில் விடை தருக.

(அ) 'ஒழுக்கத்தின்' – எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'பொருள்' – என முடியும் குறள்.

(இ) 'திருமறையோர்' – எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

- o 0 o -

10th

# மார்ச் - 2018

## தமிழ் - முதல் தாள்

[செய்யுளும், உரைநடையும்]

[நேரம் : 2½ மணி] [மதிப்பெண்கள் : 100]

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.
(ii) வினா எண் 49-க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

பிரிவு – I பகுதி – 1 (மதிப்பெண்கள் : 20)

**I. உரிய விடையை எழுதுக.** [6 × 1 = 6]

1. சேக்கிழார் பெருமான் அருளியது ______ .
(அ) பெரியபுராணம்
(ஆ) தலபுராணம்
(இ) சிவபுராணம்
2. தாண்டகம் பாடுவதில் வல்லவர் ______ .
(அ) திருஞானசம்பந்தர்
(ஆ) திருநாவுக்கரசர்
(இ) மாணிக்கவாசகர்
3. நும்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நந்திக்கலம்பக பாடலில் அமைந்துள்ள திணை ______ .
(அ) பாடாண் திணை
(ஆ) கரந்தைத் திணை
(இ) வஞ்சித் திணை
4. அம்பேத்கரை "ஆராய்ச்சியின் சிகரம்" எனப் புகழ்ந்துரைத்தவர் ______ .
(அ) இராசேந்திரபிரசாத் (ஆ) பெரியார் (இ) நேரு
5. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் ______ .
(அ) மு. வரதராசனார்
(ஆ) திரு.வி.க.
(இ) பேரறிஞர் அண்ணா
6. 'பண்ணொடு தமிழொப்பாய்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெறும் நூல் :
(அ) திருக்குறள்
(ஆ) தேவாரம்
(இ) திருவாசகம்

பகுதி – 2

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** [6 × 1 = 6]

7. ______ நாள், திருவள்ளுவர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.
8. கம்பராமாயணத்தில் – நும் பாடப்பகுதியாக அமைந்துள்ள படலம் ______ .
9. எண்கு என்பதன் பொருள் ______ .
10. "தமிழ் மிகவும் பண்பட்ட மொழி" எனக் கூறிய மொழியியல் அறிஞர் ______ .
11. காந்தியடிகள் ______ என்னும் நாடக நூலைப் படித்தார்.
12. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்பார் ______ .

பகுதி – 3

**III. பொருத்துக.** [4 × 1 = 4]

| | | |
|---|---|---|
| 13. கவிகை | – | பவளம் |
| 14. அரியாசனம் | – | அழிக்காமை |
| 15. துகிர் | – | குடை |
| 16. சாய்க்காமை | – | சிங்காதனம் |

பகுதி – 4

**IV. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.** [4 × 1 = 4]

17. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரி நடத்துவதே சமத்துவமாகும்.
18. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.
19. வள்ளலாரின் இயற்பெயர் இராமலிங்கர்.
20. பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்தமருத்துவம்.

பிரிவு – II பகுதி – 1 (மதிப்பெண்கள் : 20)

**V. கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

21. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
22. என்றும் இடும்பை தருவது எது?
23. கம்பனின் பெருமையைக் கூறும் தொடர்கள் இரண்டு எழுதுக.
24. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
25. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?
26. சங்க வெண் குழையோர் யார்? அவர் எத்தன்மையர்?
27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

பகுதி – 2

**VI. கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** [5 × 2 = 10]

28. திராவிட மொழிகள் எவை? அவற்றிற்குத் தாய்மொழியாகத் திகழ்வது எது?
29. விளக்கப்படம் பற்றி நீவிர் அறிவன யாவை? எடுத்துக்காட்டு தருக.
30. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?
31. 'வலவன் ஏவா வானூர்தி' - என்னும் தொடர் விளக்கும் பொருள் யாது?
32. இளைஞர்களுக்கே உரிய கடமை எது எனக் காந்தியடிகள் கூறுகிறார்?
33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
34. நும் பாடப்பகுதியில் உள்ள பணிவாய்ப்புக்குரிய கல்வித் தகுதிகளை எழுதுக.

பிரிவு – III பகுதி – 1 (மதிப்பெண்கள் : 24)

**VII. கீழ்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** [3 × 4 = 12]

35. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?
36. குகன் படகைச் செலுத்திய விதத்தை விளக்குக.
37. சான்றோர் நட்புக்கு உவமையாகப் புறநானூறு கூறுவனவற்றை எழுதுக.
38. புலி முழங்கிய ஓசையைக் கேட்ட வனவிலங்குகளின் நிலையை சீறாப்புராண ஆசிரியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
39. "செடியின் வெற்றி பூவில் உள்ளது" என இளந்திரையன் கூறுவனவற்றை எழுதுக.

பகுதி – 2

**VIII.** கீழ்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். [3 × 4 = 12]

40. தமிழரிடம் இன்று பரவியுள்ள பெருநோய் எது? அதுகுறித்து விளக்குக.
41. அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார்? அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?
42. பேச்சுக்கலையில் தொடுத்தல் பற்றி எழுதுக.
43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.
44. 'எளிமை ஓர் அறம்' எனக் கருதிய காந்தியடிகள் அதைக் கடைபிடித்த முறையை விளக்குக.

பிரிவு – IV (மதிப்பெண்கள் : 10)

**IX. கீழ்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** [5 × 1 = 5]

45. ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
(i) இலக்கணக் குறிப்புத் தருக. – ஒழுகுதல்
(ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.
(iii) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
(iv) இப்பாடலின் ஆசிரியர் யார்?
(v) பொருள் தருக – கிளை

46. **கீழ்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
தமிழ்ச் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்து வளமடையச் செய்தனர்; மேலும், எளிய குடிமகனையும், குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கிக் காப்பியம் படைத்தனர். குடிமக்கள் காப்பியமான சிலப்பதிகாரம் 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்னும் அறநெறியை உலகாள்வோர்க்கு உணர்த்துகிறது. இந்நூல் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலத் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.
**வினாக்கள்** [5 × 1 = 5]
(i) தமிழ்ச் சான்றோர் மொழியை எவ்வாறு பிரித்தனர்?
(ii) குடிமக்கள் காப்பியம் எது?
(iii) தமிழ்ச் சான்றோர் யாரைக் காப்பியத் தலைவர்களாக்கினர்?
(iv) சிலப்பதிகாரம் உலகாள்வோர்க்கு உணர்த்தும் அறநெறி யாது?
(v) சங்ககாலத் தமிழர்களின் கலை இலக்கியத் தனித் தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்பவை எவை?

பிரிவு – V பகுதி – 1 (மதிப்பெண்கள் : 26)

**X.** கீழ்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்கவும். [2 × 8 = 16]

47. (அ) காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
**அல்லது**
(ஆ) புலி வசனித்த படலத்தின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

48. (அ) அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?
**அல்லது**
(ஆ) கலை அறிவியல்கல்வி, சிறு தொழில்கல்வி குறித்து விவரிக்கவும்.

பகுதி – 2

பின்வரும் மனப்பாடப்பாடலை அடிபிறழாமல் எழுதுக. [2 + 2 + 6 = 10]

49. செய்யுள் வடிவில் விடை தருக.
(அ) 'ஒழுக்கத்தின்' – எனத் தொடங்கும் குறள்.
(ஆ) 'பொருள்' – என முடியும் குறள்.
(இ) 'திருமறையோர்' – எனத் தொடங்கும் பெரியபுராணம் பாடல்.

❖❖❖❖

# விடைகள்

## தமிழ் - முதல் தாள்

**I.**

1. (அ) பெரியபுராணம்
2. (ஆ) திருநாவுக்கரசர்
3. (அ) பாடாண் திணை
4. (ஆ) பெரியார்
5. (இ) பேறறிஞர் அண்ணா
6. (ஆ) தேவாரம்

**II.**

7. தைத் திங்கள் இரண்டாம்
8. குகப் படலம் (கங்கைப் படலம்)
9. கரடி
10. மாக்சுமுல்லர்
11. சிரவண பிதுர்பத்தி
12. திருமூலர்

**III.**

| | | | |
|---|---|---|---|
| 13. | கவிகை | – | குடை |
| 14. | அரியாசனம் | – | சிங்காதனம் |
| 15. | துகிர் | – | பவளம் |
| 16. | சாய்க்காமை | – | அழிக்காமை |

**IV.**

17. சமத்துவம் என்பது என்ன?
18. படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
19. வள்ளலாரின் இயற்பெயர் என்ன?
20. சித்தமருத்துவம் என்பது என்ன?

**V.**

21.
| | |
|---|---|
| 1. முதற்பாவலர் | 5. பொய்யில்புலவர் |
| 2. தெய்வப் புலவர் | 6. பெருநாவலர் |
| 3. செந்நாப்போதார் | 7. தேவர் |
| 4. நாயனார் | 8. மாதானுபங்கி. |

22. **தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.**
என்றும் இடும்பை தருவது தீயொழுக்கம் ஆகும்.

23. **கம்பரின் சிறப்பை உணர்த்தும் தொடர்கள் :**
கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்.

24. வந்தவர் வாகீசர், என்பதை உணர்ந்த அப்பூதியடிகள் தம் தலைமேல் கைகளைக் குவித்து வணங்கினார். தம் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகிட நின்றார். உரை தடுமாறினார். மெய்சிலிர்க்கத் தரையில் வீழ்ந்து திருநாவுக்கரசருடைய தாமரை மலர் திருவடிகளை தலையால் வணங்கினார்.

**25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் :**

1. அதிவீரராம பாண்டியன்
2. வில்லிப்புத்தூரார்
3. ஒட்டக்கூத்தர் ஆகியோராவர்.

26. சங்க வெண் குழையோர் என்பவர் சிவபெருமான். அவர் எவர்க்கும் ஆட்படாத் தன்மையுடையவர்.

27. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

**VI.**

28. திராவிட மொழிகள் : கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் இவற்றிற்கு தாய்மொழியாகத் திகழ்வது தமிழ்.

29. ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக் கொண்டு, அதைப் பற்றிய முழு விளக்கத்தினையும் தருவது விளக்கப்படமாகும்.
எ.கா– உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்வு.

30. குமரி மலை, பஃறுளி ஆறு, இலெமூரியாக் கண்டம் முதலியனவாகும்.

31. ‘வலவன் ஏவா வானூர்தி’ வலவனால் ஏவப்படாத வானூர்தியைப் பழந்தமிழர்கள் விண்ணில் செலுத்தி இருக்கலாம் என உணர்த்துகிறது.

32. தன்னாட்டுப் பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது என காந்தியடிகள் கூறுகிறார்.

33. வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.
சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.

34. பணிவாய்ப்புக் குறித்த கல்வித் தகுதிகள் தொழிற்கல்வி, தொழில் நுட்பக் கல்வி, கலை அறிவியல் கல்வி, சிறுதொழிற்துறைக் கல்வி என்பனவாகும். இவை வேலைவாய்ப்புக்கான அமுதசுரபியாகும்.

**VII.**

**35. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் :**

1. தமிழ் நூல்களை எளிய நடையில் எழுதுதல் வேண்டும். இலக்கண நூல்களைப் புதிதாக இயற்றுதல் வேண்டும்.
2. உலகின் புதிய ஆய்வுச் சிந்தனைகளை விளக்கப்படங்களுடன் தமிழ்மொழியில் சிறந்த நூல்களாக வெளியிட வேண்டும். இலவச நூல் நிலையங்களை ஊர்தோறும் ஏற்படுத்த வேண்டும்.
3. பல்வேறு துறை நூல்களைப் பிறர் துணையின்றி எல்லாரும் படித்து அறிந்து கொள்ளும் வகையில், தமிழில் வெளியிட வேண்டும்.
4. தமிழின் பெருமையை பேசிப் பேசிக் காலம் கழிக்கக்கூடாது.
எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதல் வேண்டும்.
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.

36. படகினை விரைந்து செலுத்துமாறு குகனுக்கு இராமன் கட்டளையிட்டவுடன் இராமனின் நண்பனாகிய குகனும் படகை விரைவில் செலுத்தினான். மடங்கிவிழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளம் அன்னம் விரைந்து செல்வதனைப் போலப் படகு சென்றது. அவர்களின் பிரிவால் அனலப்பட்ட மெழுகுபோல் துன்பமுற்று அந்தணர்கள் மனம் உருகி நின்றார்கள்.

37. பொன்னும், பவளமும், முத்தும், மாணிக்கமும் வெவ்வேறு இடங்களில் தோன்றினாலும், இவற்றை மாலையாகக் கோத்து அணிகலனாக அமைக்கும்போது, தம்முள் ஒருங்கு சேரும்.
அதுபோல சான்றோர் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர். சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர் என்கிறார் கண்ணகனார்.

38. புலி முழங்கிடும் ஓசையினைக் கேட்டதும் பெரிய காட்டெருமைகள், பிளந்த பாதங்களையுடைய பன்றிகள், அடர்ந்த முடிகள் நிரம்பிய கரடிகள், அழகிய கலைமான்கள், புலி, சிங்கம், யானை போன்ற விலங்கினங்கள் கால்கள் தடுமாறக் கீழே விழுந்து நடுக்கமுற்றன.

**39. சாதனைப் பூக்கள் :**

பூப்பதற்கு முன் செடிகள் ஓய்வெடுப்பதில்லை. செடியின் வெற்றி, பூவில் உள்ளதைப் போல், உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

**“சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே – இங்கு**
**நல்லசெடி இளைப் பாறிடுமோ?”**

**VIII.**

**40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன :**

தமிழரிடம் இன்று பரவியுள்ள பெருநோய் மணக்கொடை ஆகும்.

தனது மகனின் கல்விக்குச் செலவழிக்கும் பணத்தை வட்டியும் முதலுமாக வரும் மனைவியிடம் மணக்கொடையாகப் பெற்றுவிட பெற்றோர்கள் துடிக்கிறார்கள். சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும், அன்பும், தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.

மணக்கொடையை ஒழிக்க, இளைஞர்கள் மணக்கொடையின்றித் திருமணம் செய்யத் துணிய வேண்டும்.

41. மராட்டிய மாநிலத்தில் இரத்தினகிரி மாவட்டத்தில் உள்ள ‘அம்பவாடே’ என்னும் சிற்றூரில் 1891–ஆம் ஆண்டு ஏப்ரல் 14–ஆம் நாள் அம்பேத்கர் பிறந்தார்.

**அம்பேத்கரின் பெற்றோர் :**

தந்தை – இராம்ஜி சக்பால், தாய் – பீமாபாய்.

**42. தொடுத்தல் :**

தொடக்க உரைக்குப் பிறகு இடை இடையே சுவைமிக்க சொற்களும், குணம் மிக்க கருத்துகளும் பிணைத்துப் பேசுவதே ‘தொடுத்தல்’ எனப்படும். ஓவியன் பல வண்ணம் தீட்டி இயற்கை வனப்பை உருவாக்குவது போல செய்தியின் நுட்பங்களையும், கருத்துகளையும் வரிசைப்படுத்தி பேசுவது பேச்சாளரின் கடமையாகும்.

43. பழந்தமிழகத்தில் உழுபவரே உயர்ந்தோராக மதிக்கப்பட்டனர். ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்கிறது திருக்குறள். தமிழர், உழுது பயிர் செய்து உலகைக் காக்கும் இத்தொழிலைப் பெரிதும் போற்றினர்.

‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்ற புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது. உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது.மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

**44. எளிமை ஓர் அறம் :**

மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த காந்தியடிகள், ஆசிரமத்தில் தாமே சமையல் செய்து உண்ணுவதோடு மட்டும் அல்லாமல் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தார். தம் கழிவுகளைத் தாமே அகற்றினார்.

எழுதித் தேய்ந்த ஒரு பென்சிலாக இருந்தாலும், அதை இழக்க மனம் வராமல் தேடுவார். பகட்டான வாழ்க்கை பாவம் என்று கருதிய அவர் எளிமையை ஓர் அறமாகப் போற்றினார்.

**IX.**

45. (i) தொழிற் பெயர்
(ii) ஆ**ற்**றுதல் –போ**ற்**றுதல்
ப**ண்**பெனப் –அ**ன்**பென
(iii) கலித்தொகை
(iv) நல்லந்துவனார்
(v) சுற்றம்

46. (i) தமிழ்ச் சான்றோர் மொழியை இயல், இசை, நாடகம் எனப் பிரித்தனர்
(ii) குடிமக்கள் காப்பியம் என்பது சிலப்பதிகாரம் ஆகும்.
(iii) தமிழ்ச் சான்றோர் எளிய குடிமகனையும், குடிமகளையும் காப்பியத் தலைவர்களாக்கினர்.
(iv) சிலப்பதிகாரம் உலகாள்வோர்க்கு உணர்த்தும் அறநெறி 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'
(v) சிலப்பதிகாரம் கூறும் கலைநுட்பச் செய்திகள், சங்ககாலச் தமிழர்களின் கலை, இலக்கியத் தனித்தன்மைகளுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

**X.**

47. (அ) காலமறிதல் என்பது செய்யப் போகும் செயல் எதுவாயினும் அதனை நிறைவேற்ற சரியான காலத்தை அறிந்து செய்தல் நன்மை பயக்கும்.

**காலமறிதலின் சிறப்பு :**

பருவத்தே பயிர் செய்வதுபோல் காலமறிந்து செயல்படுவதால் வாழ்வில் வெற்றிகள்தான்.

நம்மைவிட வலிமையானவர்களை வெல்ல காலம் கருதி காத்திருக்க வேண்டும்.

***பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்,***
***வேந்தர்க்கு வேண்டும் பொழுது.***

பகலில் தன்னைவிட வலிமைமிக்கக் கோட்டானைக் காக்கை வென்று விடும், அதுபோல் பகையை வெல்லக் கருதும் அரசர்கள் அதற்கேற்ற காலம் வேண்டும்.

தகுந்த கருவிகளோடு ஏற்ற காலம் அறிந்து செயல்பட்டால், எளிதில் நிறைவேற்ற முடியாத செயல் ஒன்றுமில்லை.

காலமறிந்து இடத்தோடு பொருந்திச் செயல்பட்டால் உலகத்தையே விரும்பினாலும் கிடைக்கும்.

**காத்திருத்தலின் சிறப்பு :**

இந்த உலகம் முழுவதும் வேண்டும் என்போர், தகுந்த காலத்தை எண்ணித் தவறாமல் காத்து இருப்பர்.

***காலங் கருதி இருப்பர் கலங்காது***
***ஞாலங் கருது பவர்.***

உலகம் முழுவதையும் ஆட்சிச் செய்ய நினைப்பவர், அதற்கு ஏற்ற காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல் பொறுமையோடு காத்திருந்தால் வெற்றி நிச்சயம்.

***ஊக்கமுடையான ஒழுக்கம் பொருதகர்***
***தாக்கற்குப் பேருந் தகைத்து.***

உள்ளத்தில் ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து பொறுமையுடன் காத்திருப்பது போர் செய்யும் ஆட்டுக்கிடா தன் பகையைத் தாக்குவதற்காகப் பின் வாங்குவது போன்றதாகும்.

அறிவுடையவர் பகைவர் தீங்கு செய்த அப்பொழுதே உடனே சினம் கொள்ளமாட்டார், வெல்வதற்கு ஏற்ற காலம் பார்த்து வெல்வர்.

ஒருவர் தகுந்த சந்தர்ப்பம் வாய்க்கும்போது, அதைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே சிறப்பாக காரியங்களைச் செய்துவிட வேண்டும். ஒரு செயலைச் செய்யக் கருதுபவர் ஏற்ற காலத்தில் செய்தால் வரும் நன்மைகளை எடுத்து இயம்பியுள்ளார் வள்ளுவர்.

**அல்லது**

**(ஆ) குறிப்புச் சட்டகம் :**

1. புலியின் தோற்றம்
2. புலியின் கொடுஞ்செயல்
3. வனத்தில் வாழும் விலங்குகளின் நிலை
4. நபியின் வருகையும், புலியின் பணிவும்
5. முகம்மது நபியின் கருணையும், கட்டளையும்

அடர்ந்தக் காட்டில் வாழும் புலியொன்று, அங்கு வாழும் சிங்கம் தவிர்த்த மற்ற விலங்குகளுக்கும், மக்களுக்கும் தொல்லை கொடுத்து வந்தது. அப்புலி முகம்மது நபியைப் பணிந்து வணங்கியதும், வேறு காட்டிற்குச் சென்றதும் 'புலி வசனித்த படலத்தில்' கூறப்பட்டுள்ளது.

**புலியின் தோற்றம் :**

புலி தனது நீண்ட வாலினால் தரையில் அடித்து, உடல் நிமிர்ந்து, நான்கு கால்களையும் மடித்து தரையின் மேல்படுத்து, இரண்டு கண்களும் நெருப்புப் பொறிகளைக் கக்க, வெண்மையான பற்கள் ஒளிவிட, வாயில் புலால் நாற்றம் வீச, முன் நெருங்கிய காட்டில் சினத்தோடு இருந்தது.

**புலியின் கொடுஞ்செயல் :**

1. புலியானது கூர்மையான நகங்களை உடைய சிங்கக் கூட்டங்களைத் தவிர்த்து மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும். பனை போன்ற பெரிய தும்பிக்கையினையும், மூன்று மதங்களை உடைய யானைகளின் கொம்புகளைப் பிடித்து இழுத்து, அவற்றின் மார்பினைக் கீறிக் குருதியினைக் குடிக்கும்.
2. பெரிய மலைகளும் அதிருமாறு இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.

**வனத்தில் வாழும் விலங்குகளின் நிலை :**

1. புலி முழங்கிடும் ஓசையினைக் கேட்டதும் பெரிய காட்டெருமைகள், பிளந்த பாதங்களையுடைய பன்றிகள்,
2. அடர்ந்த முடிகள் நிரம்பிய கரடிகள், அழகிய கலைமான்கள், புலி, சிங்கம், யானை போன்ற விலங்கினங்கள் கால்கள் தடுமாறக் கீழே விழுந்து நடுக்கமுற்றன.

**நபியின் வருகையும், புலியின் பணிவும் :**

முகம்மது நபியின் வருகையைப் பார்த்த புலி. தனது வாலை வளைத்து, உடல் நடுக்கமுற்று மெல்லமெல்ல நடந்து வந்து, தன் தலையைத் தாழ்த்திப் பணிந்து குளிர்ச்சி பொருந்திய தளிர் போன்ற திருவடிக் காட்சி கிடைத்ததென்று வணங்கி நின்றது.

**முகம்மது நபியின் கருணையும், கட்டளையும் :**

1. தம் முன் வந்த புலியை, மந்திரமலைக்கு ஒப்பாகிய முகம்மது நபி அவர்கள் அழகிய தன் மென்மையான கரங்களினால் தலையையும், முகத்தையும் தடவி அருளினார். பின்னர் நபிகள் நாயகம் புலியை நோக்கி, நீ இன்று முதல் உயிர்வதை செய்வதை விடுத்து, இக்காட்டை விட்டு வேறொரு காட்டிற்கு செல்வாயாக" என்றுக் கூறினார்.
2. நபிகளின் அன்பு கட்டளையை ஏற்ற புலி 'நன்று நன்று' என புகழ்ந்தவாறே அக்காட்டைவிட்டு வேறு காட்டிற்குச் சென்றது. இந்நிகழ்ச்சி கண்ட மக்கள் வியந்து இறைத்தூதர் இவர்தான் எனத் தெளிந்து நபிகள் நாயகத்தைப் புகழ்ந்தனர்.

48. (அ) **குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. சுதந்திர இந்தியா
3. சாதிகளற்ற இந்தியா
4. கல்வி வளர்ச்சி பெற்ற இந்தியா
5. சமதர்ம சமூக இந்தியா
6. மூடநம்பிக்கையற்ற இந்தியா
7. முடிவுரை

**1. முன்னுரை :**

இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்ட அம்பேத்கர், சாதிகளற்ற இந்தியாவை, இலட்சியம் நிறைந்த இந்தியாவை உருவாக்க விரும்பினார் அதைப் பற்றி இங்கு காண்போம்.

**2.சுதந்திர இந்தியா :**

இந்தியர்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்க வேண்டும். அந்நியர் ஆதிக்கத்தை நீக்கி மக்களால் ஆளப்படும் மக்களாட்சி வேண்டும், என வட்டமேசை மாநாட்டில் குரல் கொடுத்தார்.

**3.சாதிகளற்ற இந்தியா :**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாக உள்ள சாதி 'களையப்பட வேண்டிய களை' என்றார் அம்பேத்கர். இந்தியர்களின் நலத்திற்கும், மகிழ்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் சாதி எனும் நோய் துன்பம் விளைவிக்கின்றது. அதனை மக்கள் உணரும்படி செய்தல் வேண்டும் என்றார்.

**4. கல்வி வளர்ச்சி பெற்ற இந்தியா :**

அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என விரும்பிய அம்பேத்கர். அறியாமையை அகற்றிக் கல்வியும், செல்வமும் உடைய நாடாக, இந்தியாவை அமைக்க விரும்பினார்.

அறிவியல் முறையிலான கற்பித்தல், விருப்பு வெறுப்பற்ற கற்பித்தல், ஊக்கத்தைத் தூண்டுகின்ற கற்பித்தல், தனித்தன்மையை வெளிக்கொணர வைக்கும் கற்பித்தல் போன்ற உயர்கல்வி முறையால் இந்தியா வளர வேண்டும் என அம்பேத்கர் விரும்பினார்.

**5.சமதர்ம சமூக இந்தியா :**

சுதந்திரம் என்பது சுயேச்சையாக நடமாடும் உரிமை; அது உயிரையும், உடைமையையும் பாதுகாக்கும் உரிமை என்றார்.

'எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்' என்றார்.

ஜனநாயகத்தின் மறுபெயராக உள்ள சகோதரத்துவம் மலர வேண்டும் என்றார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் இலட்சிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என அம்பேத்கர் விரும்பினார்.

**6.மூடநம்பிக்கையற்ற இந்தியா :**

சமுதாயத்தை அரித்துக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை அகற்றி, வேறுபாடற்ற மக்கள் சமுதாயம் உள்ள இந்தியாவை அமைக்க விரும்பினார்.

**7.முடிவுரை :**

எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதரையும் ஒரே மாதிரியாய் நடத்தும் சமத்துவ இந்தியாவை உருவாக்க அம்பேத்கர் விரும்பினார்.

**அல்லது**

(ஆ) மேனிலைக் கல்வியில் +2 தேர்ச்சி பெற்றோர் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொருளியல், வரலாறு, கணக்குப் பதிவியல், கணிப்பொறியியல் முதலிய பிரிவுகளில் சேர்ந்து இளங்கலைப் பட்டம் பெறலாம். அதன்பின்னர் முதுகலைப் பட்டமும் பெறலாம்.

பின்பு, கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளம் கல்வியியல் பட்டம் பெற்றுப் பட்டதாரி ஆசிரியர் பணியைப் பெறலாம்.

**போட்டித் தேர்வும், வேலைவாய்ப்பும் :**

1. தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் **(TNPSC)**
2. நடுவணரசுத் தேர்வாணையம் **(UPSC)**
3. தொடர் வண்டித்துறை ஆணையம் **(RRB)**
4. பணியாளர் தேர்வாணையம் **(SSC)**
5. வங்கித்துறை **(Bank)**
6. ஆயுள் காப்பீட்டுத் துறை **(LIC)**

முதலிய துறைகள் நடத்தும் போட்டித் தேர்வில் வெற்றிப் பெற்றுப் பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

அரசு அமைப்புகளின் வேலைவாய்ப்புத் தகவல்களை நாளேடு, தொலைக்காட்சி, இணையம், வானொலி முதலிய ஊடகங்கள் மூலம் பெற்று விண்ணப்பிக்கலாம். மாவட்ட வேலைவாய்ப்பு மையத்தில் பதிவு செய்து, வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

**சிறுதொழில் கல்வி :**

**சிறுதொழில் பயிற்சியில் சேரத் தகுதி :**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்/பெறாதவர்கள்.

**பயிற்சிக் காலம் :**

ஓராண்டு அல்லது ஈராண்டு.

**படிப்புகள் :**

1. கம்மியர், 2. கடைசல் பிடிப்பவர், 3. கட்டட வரைவாளர், 4. நில அளவையாளர், 5. தச்சர்.

**பழுதுப் பார்க்கும் படிப்புகள் :**

1. இயந்திரம், 2. வாகனம், 3. தொலைக்காட்சி, 4. குளிரூட்டும் கருவி, 5. செல்பேசி, 6. கணினி.

அவரவர் விருப்பத்திற்கேற்பச் சேர்ந்து படித்து வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

அரசுப் பணிக்காகக் காத்திராமல் சுயதொழில் தொடங்கிப் பலரும் வேலைவாய்பைப் பெறலாம்.

49. (அ) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

(ஆ) பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்,
பொருளல்ல தில்லை பொருள்.

(இ) திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமையறிந் துரைசெய்வார் பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்என்றார்.

❖❖❖❖